வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 14.3.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

வடகிழக்கு மாநிலங்களில் புதிய குற்றவியல் சட்டங்களின் அமலாக்கம் குறித்த ஆய்வு கூட்டம் குவஹாத்தியில் உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் நடைபெற உள்ளது.

தமிழ்நாடு சட்டப் பேரவையில் 2025-26-ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையை மாநில நிதி அமைச்சர் திரு தங்கம் தென்னரசு இன்று தாக்கல் செய்தார்.

புதிய தேசிய கல்விக் கொள்கை அந்தந்த மாநில தாய் மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மேக்வால் தெரிவித்துள்ளார்.

இந்திய ராணுவத்தில் நடப்பாண்டிற்கான அக்னி வீரர் ஆள் சேர்ப்பு பணிகள் துவங்கி உள்ளதாக சென்னை ராணுவ தலைமையகம் தெரிவித்துள்ளது.

*அமித் ஷா-அசாம்*

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா 3 நாள் பயணமாக இன்று மாலை அசாம் மாநிலம் புறப்பட்டுச் செல்கிறார். அங்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் திரு அமித் ஷா, நாளை காலை அம்மாநில

முதலமைச்சர் திரு ஹிமந்த பிஸ்வ சர்மா மற்றும் மத்திய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழி போக்குவரத்து துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் முன்னிலையில் கோலாகாட் மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ள லச்சித் பர்புகான் காவலர் பயிற்சி பள்ளியை திறந்து வைத்து, காவலர் குடியிருப்புக்கான கட்டுமானப் பணிகளுக்கும் அடிக்கல் நாட்ட உள்ளார். தமது அசாம் பயணத்தின் போது, வடகிழக்கு மாநிலங்களின் முதலமைச்சர்களுடன், குவஹாத்தியில் நடைபெற உள்ள உயர்மட்ட கூட்டம் ஒன்றில், வடகிழக்கு பிராந்தியத்தில் 3 புதிய குற்றவியல் சட்டங்களின் அமலாக்கம் குறித்தும் ஆய்வு மேற்கொள்ள உள்ளார்.

வேவ்ஸ்

உலக ஒலி-ஒளி மற்றும் பொழுது போக்கு- WAVES -2025, உச்சி மாநாடு மும்பையில் மே மாதம் 1-ஆம் தேதி முதல் 4-ஆம் தேதி வரை நடைபெறும் என்று மத்திய தகவல்- ஒலிபரப்பு அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். இந்த உச்சி மாநாட்டை ஒட்டி, படைப்பாளர்களின் பொருளாதாரத்திற்காக ஒரு பில்லியன் டாலர் நிதியை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் அறிவித்துள்ளார். இதுகுறித்து புதுடெல்லியில் நேற்று நடைபெற்ற உயர்மட்ட அமர்வில் தெரிவித்த திரு வைஷ்ணவ், நாட்டின் முதலாவது, இந்திய படைப்பாற்றல் தொழில் நுட்ப நிறுவனம் மும்பையில் உள்ள கோரேகான் திரைப்பட நகரத்திற்கு

அருகே அமைக்கப்படும் என்றும் தெரிவித்தார். நிகழ்ச்சியில் பேசிய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெங்சங்கர், பொழுது போக்கு துறைகளுக்கான கலந்துரையாடல்கள், விவாதங்கள் ஒத்துழைப்பு மற்றும் ஊடக புதுமையாக்கங்களுக்கான முக்கிய மேடையாக வேவ்ஸ் சேவை ஆற்றும் என்று தெரிவித்தார். வேவ்ஸ் உச்சி மாநாடு ஊடகம் மற்றும் கேளிக்கை துறையின் தலைவர்கள், பங்குதாரர்கள் மற்றும் படைப்பாளிகள் தங்களுக்கான சவால்களை பகிர்ந்து, துறையின் எதிர்காலத்தை வடிவமைக்க உறுதுணையாக இருக்கும் என்று தெரிவித்தார்.

*தமிழ்நாடு-பட்ஜெட்*

தமிழ்நாடு சட்டப் பேரவையில் 2025-26-ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையை மாநில நிதி அமைச்சர் திரு தங்கம் தென்னரசு இன்று தாக்கல் செய்தார். இன்று தொடங்கிய இந்த பட்ஜெட் கூட்டத் தொடர் அடுத்த மாதம் 30-ஆம் தேதி வரை நடைபெறும் என்றும், பட்ஜெட் மீதான விவாதம் இம்மாதம் 17-ஆம் தேதி நடைபெறும் என்றும் சட்டப்பேரவைத் தலைவரின் அலுவலக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

நாளை வேளாண் துறைக்கான நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படுகிறது. இன்றைய பட்ஜெட் கூட்டத் தொடரில் அமளியில் ஈடுபட்ட அஇஅதிமுக உறுப்பினர்கள் மதுபான விற்பனையில் முறைகேடு

நடைபெற்றுள்ளதாகவும் அதுகுறித்து விவாதிக்க அனுமதி மறுக்கப்பட்டதாகவும் கூறி, பேரவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

பின்னர் பேரவைக்கு வெளியே செய்தியாளர்களைச் சந்தித்த எதிர்கட்சித் தலைவர் திரு பழனிசாமி, அண்மையில் டாஸ்மாக் அலுவலகத்தில் அமலாக்கத்துறையால் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில், மதுபான கொள்முதல் மற்றும் விற்பனையில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக தெரிய வந்துள்ளதாகவும் இதுகுறித்து பேரவையில் விவாதிக்க பேரவைத் தலைவர் அனுமதிக்கவில்லை என்றும் தெரிவித்தார். பிஜேபி உறுப்பினர் திரு நைனார் நாகேந்திரன் செய்தியாளர்களிடம் பேசுகையில் ஆளும் கட்சி பல்வேறு நிதி முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சாட்டினார். இந்நிலையில் முறைகேடுகள் எதுவும் நடைபெறவில்லை என்றும் விதிமுறைகளுக்கு உட்பட்டே டாஸ்மாக் நிறுவனத்தால் மதுபானங்கள் கொள்முதல் செய்யப்படுவதாகவும் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு செந்தில் பாலாஜி தெரிவித்தார்.

கட்சத்தீவு

கட்சத்தீவு புனித அந்தோணியர் ஆலய திருவிழா இன்று காலை துவங்கியது. மீனவர்களின் பாதுகாவலராக கருதப்படும் பதுவாவின் புனித அந்தோணியர் பெயரில் கட்டப்பட்டுள்ள தேவாலயத்தில், இலங்கை

மற்றும் இந்திய மீனவர்களால் இந்த திருவிழா ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது. இந்த திருவிழாவில் கலந்து கொள்ள, இன்று காலை ராமேஸ்வரத்தில் இருந்து படகுகள் மூலம் புறப்பட்ட யாத்திரிகர்களை ராமநாதபுர ஆட்சித் தலைவர் திரு சிம்ரன் ஜித் சிங் கொடி அசைத்து வழியனுப்பி வைத்தார். கட்சத் தீவு செல்லும் மீனவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த இந்திய கடலோரக் காவல் படை கப்பல்கள் மற்றும் விமானங்களை பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தி உள்ளது.

ஹோலி

வண்ணங்களின் திருவிழாவான ஹோலிப் பண்டிகை இன்று நாடு முழுவதும் வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது. தீமைக்கு எதிரான, நன்மையின் வெற்றியைக் குறிக்கும் இந்த திருநாள் ஜாதி, மதம், வயது, பாலினம் உள்ளிட்டவைகளில் வேறுபாடு இல்லாமல் சமத்துவம் மற்றும் சகோதரத்துவ செய்தியை உலகிற்கு வழங்குகிறது. ஹோலித் திருநாளை முன்னிட்டு குடியரசு தலைவர், குடியரசு துணைத் தலைவர், பிரதமர், மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் மற்றும் இணை அமைச்சர் உள்ளிட்டோர் உலகெங்கிலும் இப்பண்டிகை கொண்டாடும் மக்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர். புதுச்சேரியிலும் வடமாநிலங்களைச் சேர்ந்த மக்கள் ஒருவர் மீது ஒருவர் வண்ணப்

பொடிகளைத் தூவியும், இனிப்புகளை பரஸ்பரம் பரிமாறிக் கொண்டும் ஹோலிப் பண்டிகையைக் கொண்டாடினர்.

*பத்ம ஸ்ரீ*

புதுச்சேரியில் பத்ம ஸ்ரீ விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள தவில் இசைக் கலைஞர் திரு தட்சிணாமூர்த்திக்கு பாராட்டு விழா நடைபெற்றது. புதுச்சேரி மாநில அனைத்து பட்டியலின மக்கள் சார்பில் நடைபெற்ற பாராட்டு விழாவில், மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மேக்வால் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, திரு தட்சிணாமூர்த்திக்கு சால்வை அணிவித்து பாராட்டு தெரிவித்தார். பாராட்டு விழாவில் இசைக் கலைஞர்களுடன் அமர்ந்து மத்திய அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மேக்வாலும் பாடல் ஒன்றை பாடினார்.

(வாய்ஸ்)

விழாவில் சட்டப் பேரவைத் தலைவர் திரு செல்வம், உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திரு சாய் ஜே சரவணன் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டு திரு தட்சிணாமூர்த்தியை பாராட்டினர்.

முன்னதாக, மத்திய அமைச்சர் புதுச்சேரி சட்டப்பேரவைத் தலைவர் திரு செல்வம் மற்றும் மாநில பிஜேபி அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற

உறுப்பினர்களை சந்தித்துப் பேசினார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசிய அவர், புதிய தேசிய கல்விக் கொள்கை அந்தந்த மாநில தாய் மொழிக்கு முக்கியத் துவம் அளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். தமிழ் பாராம்பரிய மொழி என்றும் மத்திய அரசு தமிழ் மொழியை ஊக்கப்படுத்துவதாகவும், தமிழ் உள்ளிட்ட அனைத்து மாநில தாய் மொழிகளிலும் கற்பதற்கான முன்னுரிமை மத்திய அரசால் அளிக்கப்படுவதாகவும் கூறினார்.

பத்ம ஸ்ரீ-விருது

(வாய்ஸ்)

மத்திய அரசால் பத்ம ஸ்ரீ விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள புதுச்சேரி தவில் இசைக் கலைஞர் திரு தட்சிணாமூர்த்திக்கு, தனியார் உணவகம் ஒன்றில் நேற்று நடைபெற்ற இந்த பாராட்டு விழாவின் போது தவில் வித்வான் திரு தட்சிணாமூர்த்தி மற்றும் நாட்டுப் புற இசைக் கலைஞர்களின் இசைக் கச்சேரி நடைபெற்றது. இசை நிகழ்ச்சியை கேட்டு ரசித்த மத்திய அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மேக்வால், தாமும் அவர்களுடன் இணைந்து பாட விரும்புவதாக கூறி ஓம் நமச்சிவாய என்று தொடங்கும் பக்திப் பாடலை பரவசத்துடன் பாடினார். மேலும் வாரணாசியில் நடைபெற்ற காசி தமிழ் சங்கமம் நிகழ்ச்சியில் தாம் கலந்து

கொண்ட போது இந்த பாடலை பாடியதாகவும் தெரிவித்தார். மத்திய அமைச்சருடன் இணைந்து சட்டப்பேரவை தலைவர் உள்துறை அமைச்சர் உள்ளிட்டோரும் விழாவில் பாடி மகிழ்ந்தனர்.

*மாசி மகம்*

இன்று வைத்திக்குப்பம் கடற்கரையில் நடைபெற்ற 123-ஆம் ஆண்டு மாசிமக தீர்த்தவாரியில் மயிலம் முருகர், தீவனூர் விநாயகர், செஞ்சி அரங்கநாதர், மேல் மலையனூர் அங்காளப்பரமேஸ்வரி உள்ளிட்ட தமிழக மற்றும் புதுச்சேரிப் பகுதி திருக்கோவில்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட உற்சவ மூர்த்திகள் பக்தர்களுக்கு அருள் பாலித்தனர்.

மாசிமக தீர்த்தவாரியில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கலந்து கொண்டு வழிபாடு செய்தார். பொதுப் பணித் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், பிஜேபி சட்டமன்ற உறுப்பினர் திரு ராமலிங்கம் உள்ளிட்டோரும், ஆயிரகணக்கான பக்தர்களும் தீர்த்தவாரியில் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். தீர்த்தவாரியை முன்னிட்டு இன்று புதுச்சேரியின் பல்வேறு பகுதிகளில் பக்தர்கள் மற்றும் ஆன்மிக அமைப்புகள், அறக்கட்டளைகள் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது.

*சிவா-உதவித் தொகை*

புதுச்சேரி அரசு ஆதிதிராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் திருமண உதவித் தொகை வழங்கும் நிகழ்ச்சி

நடைபெற்றது. வில்லியனூர் தொகுதியில், வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் பெண் பயனாளிகளுக்கான திருமண உதவித் தொகைக்கான ஆணை வழங்கும் நிகழ்ச்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் 25 பயனாளிகளுக்கு தலா 1 லட்சம் ரூபாய் வீதம் 25 லட்சம் ரூபாய் வழங்குவதற்கான ஆணைகளை வில்லியனூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் எதிர்கட்சி தலைவருமான திரு சிவா வழங்கினார்.

*ராணுவம்-ஆள்சேர்ப்பு*

இந்திய ராணுவத்தில் நடப்பாண்டிற்கான ஆள் சேர்ப்பு பணிகள் துவங்கி உள்ளதாக சென்னை இராணுவத் தலைமையகம் அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

பொதுப் பணி, தொழில்நுட்பம், எழுத்தர், ஸ்டோர் கீப்பர், டிரேட்ஸ் மேன், சிப்பாய், நர்சிங் உதவியாளர், பார்மா உள்ளிட்ட அக்னிவீர் பணிகளில் சேர விருப்பம் உள்ள திருமணமாகாத ஆண்கள் மற்றும் பெண்கள் ஆன்-லைன் மூலம் விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கான பொது தகுதித் தேர்வு ஆன்-லைன் மூலம் தமிழ் உள்ளிட்ட 13 மொழிகளில் நடத்தப்படும் என்றும், ஐடிஐ, டிப்ளமோ படித்தவர்கள் மற்றும் என்சிசி, பயிற்சி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு போனஸ் மதிப்பெண்கள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பணிகளுக்கான ஆன்-லைன் பதிவு இம்மாதம் 12-ஆம் தேதி துவங்கி உள்ளது என்றும், அடுத்த மாதம் 10-ஆம் தேதி முடிவடையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பிக்க வேண்டிய ஆன்-லைன் முகவரி www.join indian army.nic.in

*சைபர் கிரைம்*

இந்திய தொலை தொடர்பு ஒழுங்கு முறை ஆணையத்துடன் இணைந்து, மத்திய மற்றும் மாநில சைபர் கிரைம் காவல்துறை சார்பில், தொலைபேசி ரிங்டோன் மூலம் வெளியிடப்படும் இணைய வழி மோசடி தடுப்பு குறித்த செய்திகளை பொது மக்கள் கவனமுடன் கேட்டு, இணைய வழி மோசடி கும்பல்களிடம் இருந்து தங்களையும், தாங்கள் பாடுபட்டு சேமித்த பணத்தையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று புதுச்சேரி சைபர் கிரைம் காவல் ஆய்வாளர் திரு தியாகராஜன் வேண்டுகோள் விடுத்துள்ளார். மேலும் இந்த ரிங்டோன் வாயிலாக சைபர் கிரைம் காவல்துறையினரால் வெளியிடப்படும் விழிப்புணர்வு செய்திகள் தொடர்பான கட்டுரைப் போட்டிகள் பொது மக்களுக்கு நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

*நிலநடுக்கம்*

ஜம்மு-காஷ்மீரில் இன்று காலை நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 5.2 ஆக பதிவான இந்த நிலநடுக்கம் லடாக்கின் கார்கில்

பகுதியில் இன்று அதிகாலை 2.50 மணிக்கு பூமிக்கு கீழே 15 கிலோமீட்டர் தொலைவில் நிகழ்ந்ததாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த நில அதிர்வினால் பாதிப்புகளோ, உயிரிழப்புகளோ ஏற்படவில்லை.

*கர்நாடகா-அமலாக்கத்துறை*

அண்மையில் தங்க கடத்தலின் போது ஈடுபட்டு கைது செய்யப்பட்ட கன்னட திரைப்பட நடிகை ரன்யா ராவ் மற்றும் அவரது வளர்ப்புத் தந்தையும் கர்நாடக மாநில டிஜிபியுமான கே ராமசந்திர ராவ் ஆகியோர் தொடர்புடைய பெங்களூறு உள்ளிட்ட 8 இடங்களில் அமலாக்கத் துறையினர் இன்று சோதனையில் ஈடுபட்டனர்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

வடகிழக்கு மாநிலங்களில் புதிய குற்றவியல் சட்டங்களின் அமலாக்கம் குறித்த ஆய்வு கூட்டம் குவஹாத்தியில் உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் நடைபெற உள்ளது.

தமிழ்நாடு சட்டப் பேரவையில் 2025-26-ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையை மாநில நிதி அமைச்சர் திரு தங்கம் தென்னரசு இன்று தாக்கல் செய்தார்.

புதிய தேசிய கல்விக் கொள்கை அந்தந்த மாநில தாய் மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மேக்வால் தெரிவித்துள்ளார்.

இந்திய ராணுவத்தில் நடப்பாண்டிற்கான அக்னி வீரர் ஆள் சேர்ப்பு பணிகள் துவங்கி உள்ளதாக சென்னை ராணுவ தலைமையகம் தெரிவித்துள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 14.3.2025/Script.

----------------------